உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

சிவம்–05 | சோபகிருது வருடம் மார்கழி திங்கள் டிசம்பர் 2023 | பூமி–10



## சினிமா மோகத்தில் இருந்து விடுபடுங்கள்...



இன்று வடக்கிலே இளைஞர்கள் சினிமா மோகத்திலே கையிலே வாள்களுடன் அலைந்து திரிவதை பார்க்கும் போது,

எங்களுடைய நெஞ்சம் கனக்கின்றது. இன்று சினிமாவிலே பைத்தியங்கள் பிடித்தவர்கள் போல நடிகர்களுக்கு பால் அபிஷேகம் செய்வதும், சிலர் நடிகர்களின் படங்களை தங்களது சட்டைப் பையிலே கொண்டு திரிவதும் மன வேதனையினை தருகின்றது.

தொடர்ச்சி 02ம் பக்கம்

ஆசிரியர்
கலாநிதி.செஞ்சொற்செல்வர்.
ஆறு.திருமுருகன்
உதவி ஆசிரியர்
திரு.ச.சந்தோஷன்
வடிவமைப்பாளர்
திரு.வ.குணநீதன்

இந்தகைய காட்சிகளை பார்க்கின்ற போது வேதனையாகவும் வெட்கமாகவும் இருக்கின்றது. யாரும் எதிர்பார்த்திராத ஒரு சமூக மாற்றம் எமது மண்ணிலே தோன்றி விட்டது என்ற ஆதங்கம் மனதிலே தோன்றி கவலை தருகின்றது.

சினிமா என்பது ஒரு கலை வடிவம் அதனை முற்றுமுழுவதுமாக கூடாது என்று சொல்லுகின்ற தகுதி எனக்கு கிடையாது. நல்ல தயாரிப்பாளர்கள், நல்ல கதைகள், நல்ல சிந்தனைக்கு விருந்தான காட்சிகள், வெறும் 3 மணத்தியாலத்துள் இந்த உலகத்திற்கு நல்ல கதைகளை சொல்லுகின்ற சினிமாக்களும் உண்டு.

ஆனால் சினிமாவிலே பாத்திரங்களாக வந்துவிட்டு போகின்றவர்கள் எல்லோரும் தங்கள் வாழ்வில் பத்திரமாக வாழ்கின்றார்கள் என்று அபிப்பிராயம் கொள்வது பெரும் தவறு.

இந்திய சினிமா நட்சத்திரங்கள் பற்றி நான் சிறு வயது தொடக்கம் வாசித்து கொண்டு இருக்கின்றேன். திரையிலே வருகின்ற கதா நாயகர்கள் எல்லோரும் தங்கள் வாழ்வில் இராமனாக, சீதையாக அல்லது அரிச்சந்திரனாக அவர்கள் நடத்திருக்கலாமே அல்லாமல் அவர்கள் தங்கள் வாழ்வில் வாழ்ந்ததாக சரித்திரமே இல்லை.

இவர்களை பார்த்து ஏமாந்து விடுகின்ற இளைய சமூகம் இந்தியாவிலே இருந்தது. இந்திய மாநிலங்களிலே கேரள மாநிலம் 96 வீதம் கல்வியறிவு பெற்று உயர்ந்த நிலையிலே இருக்கின்ற பொழுது தமிழ்நாட்டிலே இந்த சினிமா பாதிப்புக்கள் இன்றும் உள்ளன.

தமது சிறு வயதிலே பாடசாலைக்கு செல்லாதவர்கள் கூட அங்கு உள்ளார்கள், பலர் வறுமையிலே வாடுகின்றார்கள்.

தமிழ்நாட்டிலே கல்வியறிவு குறைந்தவர்கள் மத்தியிலே இந்த சினிமா மோகமானது வேகம் கொண்டு இந்த சினிமாவிலே நடிப்பவர்களை கடவுளாக உயர்த்தி போற்றும் நிலை உருவாகி அவர்கள் இந்த நடிகர்களுக்காக சங்கங்கள் அமைத்துள்ளார்கள்.

ஒரு காலத்திலே தமிழுக்கும் சங்கம் அமைத்து, முத்தமிழுக்கும் சங்கம் அமைத்து மதுரை தமிழ் சங்கம் என்றும் சென்னை தமிழ் சங்கம் என்றும் சங்கங்கள் அமைத்து தமிழை போற்றிக் காத்த தமிழர் பண்பாட்டிற்கு அப்பாலே,

நடிகர்களுக்கும் நடிகைகளுக்கும் சங்கம் அமைத்து அதற்கு தலைவர் என்றும் செயலாளர் என்றும் தேர்தல் நடாத்தும் அவலம் அங்கு நடைபெறுகின்ற செய்திகளை பத்திரிகைகளிலே பார்க்கின்ற பொழுது எமது மண்ணை நினைத்து சற்று ஆறுதலாக இருந்தது.

எங்கள் மண்ணிலே சினிமா நாயகர்களுக்கு யாருமே சங்கம் அமைக்கவில்லை சினிமா நாயகர்களை யாரும் வீட்டிலே படமாக வைக்கவில்லை, சினிமா நாயகர்களின் படங்களை பொறித்த உடைகளை யாருமே அணிந்து செல்லவில்லை,

என்று நிதானமானர்கள் எல்லோரும் எங்கள் மண்ணிலே வாழ்கின்றார்கள் என்று நான் தமிழ் நாட்டிற்கு செல்லும் பொழுதுகளில் நினைத்து ஆறுதல் அடைந்தேன்.

என்ன பரிதாபம்?.. போருக்கு பின்பு ஏற்பட்ட மாற்றங்களின் விளைவு இன்று எதிர்பாரத விதமாக எங்கள் மண்ணிலே இந்த போலித்தனமான சினிமாவின் சாயல்கள் அவர்களின் உள்ளங்களிலே ஊறி இருக்கின்றது.

இதன் காரணமாகத்தான் நிதானம் கெட்ட செயற்பாடுகள் எமது மண்ணிலே நடைபெறுகின்றது.

அன்புக்குரிய மாணவர்களே உங்களுடைய கைப் பையிலே ஒரு விஞ்ஞானியின் படம் இருக்கலாம், ஒரு மெய்ஞானியின் படம் இருக்கலாம், பெற்றவர்களின் படம் இருக்காலம் ஆனால் நடடிகர்களின் படங்களை நீங்கள் சுமப்பீர்களானால் நீங்கள் இந்த மண்ணிற்கு சொந்தக்காரர்கள் அல்ல.

அன்பு குழந்தைகளே அப்படி ஏதாவது சினிமா படங்களை நீங்கள் வைத்திருந்தால் அவற்றை இன்றே அப்புறப்படுத்தி விடுங்கள்.

இந்த சினிமா நடிகர்கள் வெறும் பணத்திற்காக நடிக்கின்றார்கள். இந் சினிமா மோகத்திலே தமிழர்கள் ஊறி அழிகின்றார்கள் என்பதை உணர்ந்து வேறு பல மாநிலங்களில் இருந்து வந்து தமிழ்நாட்டிலே படம் நடடிக்கின்றார்கள்.

பலபேருக்கு தமிழ் மொழியே தெரியாது. படம் நடித்து பெரிய கதா நாயகர்களாக கொண்டாடுகின்ற பலருக்கு தமிழ் மொழியே தெரியாது.

தமிழர்களே பல கோடிகளை செலவு செய்து படம் எடுக்கின்றார்கள் தமிழர்களே நாயகன் நாயகிகளை கொண்டாடுகின்றார்கள் ஆனால் அவர்களுக்கு தமிழ் தெரியாது.

இந்த 21ம் நூற்றாண்டிலே தமிழன் ஏமாறுகின்றானே...

அன்புக்குரிய மாணவர்களே சினிமாவிலே வருகின்ற நுட்பங்கள் அனைத்தும் எமக்கு அப்பாற்பட்டவை இவை அனைத்தும் தொழில்நுட்பத்தினாலே

உருவாக்கப்பட்டவை.

மிகப் பெரிய உயரத்தில் இருந்து குதிக்கும் கதாநாயகன் எந்த காயமும் இல்லாமல் தப்புகின்றான் என்று கனவு காண வேண்டாம்.

சம தரையிலே ஓடுகின்ற நீங்கள் விழுந்தாலே காயம் ஏற்படுகின்றது ஆனால் மலையிலே இருந்து விழுந்து எழுந்து நாயகன் 10 பேரை அடித்து வீழ்த்துகின்றான் என்றால் இந்த 21ம் நூற்றாண்டிலே என்ன வேடிக்கை?

ஆற்றல் உள்ள மாணவர்கள் இது தொழில்நுட்பத்தின் கெட்டித்தனம் என்று நன்றாக ரசிக்கலாம் ஆனால் அது கதாநாயகனின் கெட்டித்தனம் என்று ரசிப்பதுதான் பெரும் ஆபத்து ஆகும்.

இன்று எமது மண்ணிலே பல இளைஞர்கள் கையிலே வாள்களுடன் திரிகின்றார்கள். சினிமா காட்சிகளிலே உள்ளது போல அவர்கள் வாள்களை கையிலே எடுத்து தெருக்களிலே சண்டை பிடிக்கின்றார்கள்.

யாழ் போதனா வைத்தியசாலையிலே மருத்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. இவ்வாறான சூழலிலே ஒவ்வொரு மாதமும் வைத்தியசாலையிலே படுக்கையிலே கிடக்கின்ற இளைஞர்களை போய் பாருங்கள்.

இவர்களுக்கு மூலம் என்ன?.. சினிமாதான்...

சினிமாவிலே காட்டுகின்ற வாள்கள் அனைத்தும் போலியானவை. வாள்களுடன் சட்டை போடும் காட்சிகளிலே சினிமா கதாநாயகனின் முகத்தினை வைத்து தொழில்நுட்பம் மூலம் காட்சிகளை தயார் செய்கின்றார்கள்.

ஆனால் பல இளைஞர்கள் என்ன நினைக்கின்றார்கள் என்றால் எங்களுடைய கதா நாயகன் நன்றாக வாள் வீசுகின்றான் என்று.

அன்பு குழந்தைகளே... இந்த சினிமா போலித்தனங்களில் நீங்கள் அகப்பட்டு விடக்கூடாது. நன்மைகளை செய்த சினிமா இன்று கெடுதல்களை உருவாக்குகின்றது.

வயதிற்கு மூத்தவர்களை ஏளனம் செய்வது,பொருளை திருடுவதற்காக கொலை செய்வது போன்ற இன்றைய இளஞர்களின் நடத்தைகள் எல்லாம் தற்கால சினிமாவிலே காட்டியவைதான்.

எமது மண்ணிலே இன்றைய திருடர்கள் எங்கே இருந்து கற்றார்கள்? சினிமாவிலே சில காட்சிகளை அவ்வாறு காட்டி விட்டு போய்விடார்கள்.

பணம் தேவை என்றவுடன் சினிமாவிலே கற்றதை கையாளுகின்றார்கள். ஒரு காலத்திலே ஆங்கில படங்களிலே மட்டும் காட்டுகின்ற காட்சிகளை தற்காலத்தில் தமிழ் சினிமா காட்சிகளிலே காட்டுகின்றார்கள்.

இன்று எங்கள் மண்ணிலே சினிமாவிலே பார்த்து விட்டு எத்தனை கொடுமைகள் நடைபெறுகின்றன. ஒரு இரக்கமற்ற ஒரு சமூகத்தை நாங்கள் எங்கள் மண்ணிலே உருவாக்கி கொண்டிருக்கின்றோம்.

சினிமாவிலேதான் பொருட்களை கடத்துகின்ற நுட்பங்களை காட்டிக் கொடுத்தார்கள். இன்று வடக்கிலே இந்தளவு போதைப் பொருட்களை கடத்துகின்றார்கள் என்றால் அது சினிமா கற்று தந்த தந்திரங்கள்தான்.

இன்று எமது மண்ணிலே போதைகளை கடத்துபவர்கள் ஒரு பெரிய நிறுவனத்தின் அதிபதி போல சிறப்பான தோற்றத்துடன் திரிகின்றார்கள் யாரும் இவர்களை எளிதில் அடையாளம் காண முடியாத அளவிற்கு திரிகின்றார்கள்.

சினிமாவிலே வரும் காட்சிகளை பார்த்து தத்தம் தேவைகளுக்கு அவற்றை பயன்படுத்துகின்றார்கள்.

ஒரு காலத்திலே யாழ்ப்பாணம் நிமிர்ந்து நின்றது. யாருக்கும் அஞ்சாது சின்றது, நிதானமாகத்தான் எந்த ஒன்றையும் செய்யும். ஒரு காலத்திலே 5 சதம் செலவு செய்வது என்றாலும் வினாக செலவு செய்ய மாட்டர்கள்.

ஒரு காலத்திலே வடக்கினுடைய பொருளாதார வலுமையினை ஏனையவர்கள் பெருமையுடன் பேசினார்கள்.

இந்த பண்பாட்டிற்கு ஆபத்து வரக்கூடிய ஆடம்பரமான செலவீனங்கள் எமது மண்ணிலே தொடங்கி விட்டது. சினிமா மோகம் பலர் வாழ்வில் குடி கொண்டுள்ளது. திருமண வீட்டிலே ஒரு பெண்ணை அலங்கரிப்பதற்கு பல இலட்சங்களை செலவு செய்கின்றார்கள்.

எங்கள் மண்ணிலே பல பெண்கள் தமிழுக்காக வாழ்ந்து உயிர் துறந்த பண்பாட்டிலே இன்று எங்கள் தமிழ் பெண்கள் ஆந்திரா வடிவமைப்பு, கேராள வடிமைப்பு என்று கூறிக் கொண்டு அலங்கரிக்கின்றார்கள்.

எங்கள் பண்பாட்டிற்கு அப்பால் பெண்களை அலங்கரிப்பதெல்லாம் எங்கள் தமிழ் பண்பாட்டிற்கு செய்யும் பொரும் துரோகம் ஆகும்.

இந்த ஒப்பனை பெண் கலைஞர்களை எங்கள் மண்ணிலே உருவாக்கியிருப்பது இந்த சினிமாதான். இந்த ஒப்பகைளை பார்த்து விட்டு சிலர் அழகாக இருப்பதாக சொல்லலாம் ஆனால் இது பெரும் ஆபத்து. எங்கள் பண்பாட்டை குழி தோண்டி புதைக்கின்ற ஆபத்து.

எத்தைனை நூற்றாண்டுகள் பழமையான வரலர்றை கொண்ட எங்கள் மண்ணிற்கு இந்த சினிமா கதா நாயகிகளை பார்த்து பார்த்து பெண்கள் எல்லோரும் திசை மாறிச் செல்கின்றார்கள்.

அன்பு குழந்தைகளே இந்த போலித்தனமான வலையிலே நீங்கள் அகப்பட்டு விடாதீர்கள்.

சினிமா நடிகர்கள் கோடிக் கனக்கில் பணம் சம்பாதிக்கின்றார்கள் ஆனால் ஒரு ஏழைக்கு கொடுக்க மாட்டர்கள்.

சினிமாவிலே கோடிக் கனக்கில் உழைத்து தள்ளுகின்ற கதாநாயகர்கள் நினைத்திருந்தால் எத்தனையோ ஏழைகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கலாம் பல தர்ம காரியங்கள் செய்திருக்கலாம்.

கோடிகளை சம்பளமாக பெற்றுக் கொள்ளும் நடிகர்கள் நினைத்திருந்தால் தெருக்களிலும், மரங்களுக்கு அடியிலும், புகையிர தண்டபாளங்களின் அருகிலும் வாழும் ஏழைகளுக்கு உதவி செய்திருக்கலாம்.

சினிமாவிலே தங்களை ஏழைகளின் பங்காளன் என வீர வசனங்களை பேசுபவர்கள் சுய வாழ்விலே ஒரு ஏழையின் வாழ்வில் ஒரு சுபீட்சத்தை ஏற்படுத்த மாட்டார்கள்.

சினிமாவிலே ஏழைகளின் பங்காளன் என்றும் அநியாயங்களை எதிர்ப்பவர்கள் போலவும் இளைஞர்களின் மனங்களில் குடி கொள்ளும் சினிமா நடிகர்கள் நிய வாழ்விலே தாம் சார்ந்த சமூகங்களிற்கு ஏதுவும் செய்வதில்லை.

முன்பு பல நடிகர்கள் தர்மங்கள் செய்திருகின்றார்கள் ஆனால் தற்காலத்தில் 90 வீதனமா நடிகர்கள் நடிகைகள் தர்மம் செய்வதில்லை.

எனவே அன்பு குழந்தைகளே போலியான இந்த சினிமா காட்சிகளை பார்த்து ஏமாந்து விடாதீர்கள். இன்று எங்கள் மண்ணிலே பலர் பணம் கொடுத்து உடலிலே சினிமா நடிகர்களின் உருவங்களை பச்சை குத்துகின்றார்கள்.

நாளும் பொழுதும் தனது பிள்ளைகளுக்காக அரும் பாடுபட்ட பெற்றோர்களை மறந்து சினிமா நடிகர்களை பச்சை குத்தும் அவலம் இன்று எங்கள் மண்ணிலே நடைபெறுகின்றது.

தமது வாழ்விலே மொழிகளை கடந்து, தேசங்களை கடந்து, மதங்களை கடந்து வாழ்ந்த எத்தனையோ சரித்திர நாயகர்களின் வரலாறுகள் உள்ளன அவற்றை படியுங்கள் இந்த சினிமா போலிகளை நம்பாதீர்கள்.

எந்தவொரு நடிகர்களின் சங்கங்களை எங்கள் மண்ணில் தமிழர்கள் கொண்டாடக் கூடாது. நடிகர்களுக்காக புத்தி கெட்டவர்களாக நடப்போமாக இருந்தால் எதற்கு பள்ளிக்கூடங்கள்? ஏன் ஆசிரியர்கள்? உங்களுடைய பெற்றோர்களுக்கு செய்கின்ற கைமாறு இதுவா?

எங்களுடைய வளரும் பயிர்களாக உள்ள மாணவர்கள் புனிதமாக வளர வேண்டும். தற்கால சினிமா படங்களை பார்க்கின்ற போது மிகவும் கவலையாக இருக்கின்றது.

ஏனென்றால் தரமான அறிவு நிறைந்த படைப்பாளிகளின் போற்றத்தக்க சினிமா படங்களை கடந்த காலங்களில் பார்த்த நாங்கள் தற்காலத்தில் வெளிவரும் சினிமா படங்களை பார்த்து வேதனைப்பட வேண்டியுள்ளது.

ஒரு காலத்திலே சினிமாவிலே பாடல்களை நிறைந்த அறிவுடைய கவிஞர்களால் படைக்கப்பட்டது. இன்று ஆங்கிலச் சொற்களை பயன்படுத்துவதும் தமிழ் மொழியினை அசிங்கப்படுத்துவம் சினிமாவில் மலிந்து போய் உள்ளது.

எத்தனை ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் அழியாத காவியங்களை முன்னைய சினிமாக்களில் பல மகான்கள் எமக்காக ஏற்படுத்தி கொடுத்தார்கள்.

ஆனால் இன்று சினிமா பாடல் என்றால் ஓசை அதிகமாகிவிடுகின்றது மேலைத்தேச வாத்தியங்கள் பாடலை தின்று விடுகின்றது கருத்து அங்கே கைகழிவிப் போகின்றது தமிழை தேட வேண்டியிருக்கின்றது.

தமிழ் படைப்புக்களில் தமிழ் அசிங்கப்படுத்தப்படுமேயானால் அது தமிழ் அன்னைக்கு செய்கின்ற துரோகம் ஆகும்.

ஒரு காலத்தியே என்ன அற்புதமான தமிழ் பாடல்கள் இருந்தது என்ன அற்புதமான படைப்புக்கள் இருந்தது இன்று அவற்றை காண முடிவதில்லை.

கவிஞர் வைரமுத்துவைப் பார்த்து ஒருவர் கேட்டார் ஆரம்பத்தில் நல்ல தமிழை தந்தீர்கள் இன்று நீங்கள் படைப்பது வானிபத்திற்காக இருக்கின்றது. அதற்கு அவர் நாங்கள் என்ன செய்ய முடியும் தயாரிப்பாளர்கள் அப்படி கேட்கின்றார்கள் என பதில் சொன்னார்.

ஒரு தமிழ் கவிஞன் அப்படி பதில் சொல்ல முடியாது.

இன்று தமிழ் படங்களுக்கு பெயர் வைப்பதற்கு கூட தமிழ் தட்டுப்பாடாக உள்ளது.கோடான கோடி தமிழர்கள் பார்க்கின்ற படங்களுக்கு தமிழ் பெயர் வைக்க மறுக்கின்றார்கள்.

சங்கம் வைத்து தமிழ் வளர்த்து தென்னாடு என்று போற்றுகின்ற தமிழ்நாட்டிலே தமிழ் படங்களுக்கு தமிழ் பெயர் இல்லை.

மகாகவி பாரதி போன்றவர்களின் படைப்புக்களை எடுத்து சினிமாக்களிலே முன்பு படைத்தார்கள் சங்கீத விற்பன்னர்களை பயன்படுத்தி அருமையான படைப்புக்களை தந்தார்கள். எண்ண முடியாத அரும் பெரும் சொத்துக்கள் தமிழர்களிடையே உள்ள போதும்,

இன்று போலித்தனமான காட்சிகளை வைத்து சினிமாக்களை தயாரிக்கின்றார்கள்.

எனவே அன்பான குழந்தைகளே...

இந்த போலியான சினிமாக்காரர்களையும் காட்சிகளையும் நம்பி அதனை பின்பற்றாமல் எம் மண்ணிற்கென்ற தனித்துவத்துடன் வாழ்ந்து,

எமது மண்ணிற்கு பெருமை தேடித்தாருங்கள்...

காலங்காலமாக கல்விச்சூழல் உள்ளது எமது யாழ்ப்பாணம். தடக்கி விழுந்தாலும் ஒரு தமிழ் பண்டிதார் யாழ்ப்பாணத்தில் இருக்கின்றார் என்று கி.வ.ஜெகநாதன் யாழ்ப்பாணத்தை புகழ்ந்து பேசினார்.

மிகப்பெரிய எழுத்தாளர் டாக்கடர் மு.வரதராஜன் இலங்கை விஜயம் என்ற தனது கட்டுரையிலே மூளை வளம் மிக்க நாடு வடக்கு என்று எழுதினார்.

இத்தகைய சாண்றோர்கள் போற்றிய இந்த மண்ணிலே ஒரு நடிகனுக்கு படம் கட்டி பால் ஊற்றி கொண்டாடும் அவலம் நடைபெறுகின்றது.

இதைப் பார்த்து வேதனை வராதா? என்ன சோதனை?

எங்களுக்குரிய அடையாளங்களை தெலைத்து விட்டு சினிமாவின் அடையாளங்களை பாதுகாக்கின்ற அவலம் எங்கள் மண்ணிலே நடைபெறுவது வேதனை தருகின்றது.

போலித்தனமான சினிமாக்களை நம்பி இதற்கு அடிமையாகி விடாதீர்கள்.

நல்லதை வரவேற்று தீயவற்றை கைவிட்டு நல்ல சமூகமாக எங்கள் சமூகம் மாற குழந்தைகளே போலித்தனமான சினிமாக்களை கைவிடுங்கள்.

நன்றி

ஆறு.திருமுருகன்,
தலைவர்,
துர்க்கா தேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை

# கிளிநொச்சியில் நடமாடும் நூலகம்!

ஒரு ஆட்டோவை மாற்றியமைத்து உருவாக்கப்பட்ட, சிறுவர்களுக்கான புத்தகங்களைக் கொண்ட நகரும் நூலகம். அதைச் செயற்படுத்தி வருபவர் சமூக அக்கறையும் அர்ப்பணிப்பும் மிக்கவர். அவர் இந் நகரும் நூலகத்தைப் பாடசாலைகள் தோறும் எடுத்துச் சென்று பிள்ளைகள் பயன்பெறும் வண்ணம் பணியாற்றிவருகின்றார்.


கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மாணவர்களின் நலன்கருதி சிங்கப்பூரிலுள்ள தமிழ்ப் பெண்ணின் அனுசரணையில் நடமாடும் நூலகமொன்று உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுவருகின்றது.

இது நாளாந்தம் ஒரு பாடசாலை என்ற முறையில் மாதத்தில் 20 பாடசாலைகளுக்குச் சென்று மாணவர்களுக்கான நூலக வசதிகளை வழங்கிவருகின்றது.


தமிழ்ப் புத்தகங்கள் குறைவாக இருப்பதனால், இயலுமானவர்கள் அன்பளிப்பாக வழங்கினால், எமது எதிர்கால சந்ததி அறிவும் ஆற்றலும் பெற்று வளர, அச் செயல் வழிகோலும் என்பது நிச்சயம்.

காலத்திற்கு தேவையான மிக அருமையான பணி! செயற்படுத்தும் நல்லுள்ளங்களிற்கு மேலும் பணி தொடர வாழ்த்துகள்.





உ

அம்பாள் துணை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் - தெல்லிப்பழை



ஆலயத்தில் பிரமாண்டமான திருப்பணிவேலைகள் நடைபெற்று வருகின்றன. இத்திருப்பணி வேலைகளை விரைவாக நிறைவுசெய்து எதிர்வரும் பங்குனி உத்தர நன்னாளில் (25.03.2024) மஹா கும்பாபிஷேகம் நிகழவேண்டுமாகையால் திருப்பணி வேலைகளுக்கான தங்களின் மேலான பங்களிப்புக்களை பின்வரும் வங்கிக் கணக்கினூடாக செலுத்தலாம்.

**வங்கி: இலங்கை வங்கி**

**கிளை: சுன்னாகம்**

**க/கு. இல. 77683985**

அன்பளிப்புத் தொடர்பான விடயங்களை thurkaiammantemple@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்



# 75 வயதில் வெறும் காலுடன் ஓடி சாதனை படைத்த அகிலம் அக்கா.

அண்மையில் பிலிப்பைன்ஸ் இல் நடைபெற்ற National Masters & Seniors Athletics போட்டியில் இலங்கையிலிருந்து கலந்து கொண்ட முள்ளியவளை, முல்லைத்தீவை சேர்ந்த திருமதி அகிலத்திருநாயகி (ஓய்வு பெற்ற சிறைச்சாலைகள் உத்தியோகத்தர்) இரண்டு தங்கப் பதக்கங்களை பெற்றார்.

1500m ஓட்டம் - தங்கப் பதக்கம்
5000m விரைவு நடை - தங்கப் பதக்கம்
800m ஓட்டம் - வெங்கலப் பதக்கம்
5000m ஓட்டம் - நான்காம் இடம்









# கண்டியில் சிறப்பாக நடைபெற்றுவரும் அறநெறிப்படசாலை

கண்டி கலஹா சிவபூமி மலையக ஆச்சிரமத்தில் இயங்கும் அறநெறிப்பாடசாலக்கு மாணவர்கள் பலர் ஆர்வத்துடன் வந்து செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. மலையகத்தின் இளம் தலைமுறையினரை ஆன்மீக நாட்டமுள்ளவர்களாக நெறிப்படுத்துவதை முதன்மை நோக்கமாக கொண்டு மேற்படி அறநெறிப் பாடசாலை இயங்கிவருகிறது.








# ஆறுமுகநாவலர் குருபூசை

சம்பூர்





நல்லூர் துர்க்கா மணி மண்டபம்





கொழும்பு சிவபூமி நிலையம்



குப்பிளான் சிவபூமி ஆச்சிரமம்



கீரிமலை தீர்த்தக்கரை



அராலி சரஸ்வதி இந்துக்கல்லூரி மாணவர் பங்குபற்றலுடன் சிவபூமி முதியோர் இல்லமு









# நாவலர் பெருமான் திருவுருவச்சிலை அமைந்துள்ள சில இடங்கள்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி



திருக்கேதீச்சரம்



நல்லூர் நாவலர் கலாச்சாரமண்டபம்




யாழ் பல்கலைக்கழகம்



சம்பூர்



கீரிமலை தீர்த்தக்கரை



இந்தியா



## அரங்கேறிய சிவபூமி மாணவர்களின் கலை நிகழ்ச்சி

(06.12.2023) யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற யாழ் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அமைப்பு நடாத்திய சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வில் வரவேற்பு நடன நிகழ்வில் பங்குபற்றிய எமது சிவபூமி பாடாசலை மாணவர்கள்....








# சிவத்தமிழ்ச் செல்வியின் பிறந்தநாள் அறக்கொடை விழா

அன்னை சிவத்தமிழ் செல்வியின் 99வது பிறந்தநாள் அறக்கொடை விழா எதிர்வரும் 07.01.2024ம் திகதி காலை 9.00 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது. இவ் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு.அ.சிவபாலசுந்தரன் அவர்களும் சிறப்பு விருந்தினராக யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட வைத்திய கலாநிதி பாலகோபி அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.



சிவத்தமிழ் செல்வியின் 99வது பிறந்த நாள் அறக்கொடை விழாவில் ஐந்து பெருந்தகைகள் சிவத்தமிழ் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். பேராசிரியர் சிவலிங்கராசா, வைத்திய கலாநிதி அருளானந்தம், இளைப்பாறிய விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், நாதஸ்வர வித்துவான் இ.கேதீஸ்வரன், இளைப்பாறிய அதிபர் மு.அருனாசலம் ஆகிய பெருந்தகைகள் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

99வது பிறந்தநாள் அறக்கொடை விழா அறக்கொடை நிதி உதவியாக தெல்லிப்பழை புற்று நோய் வைத்தியசாலைக்கு ரூபா 200,000.00 வழங்கப்படவுள்ளதுடன், உடுவில் கல்வி கேட்ட பிரிவில் உள்ள மிகவும் பொருத்தமான 50 மாணவர்களுக்கு உதவிகள் வழங்கி வைக்கப்படவுள்ளது.

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேகம் வரும் 25.03.2024ம் திகதி நடைபெற அன்னையின் திருவருள் கூடியுள்ளது. அம்பாளின் திருவருளினால் தேவஸ்தானத்தில் தற்பொழுது திருப்பணி வேலைகள் மிகவும் சிறப்புற நடைபெற்று வருகின்றது. இந்தப் பணிகளை உரிய காலத்தில் முழுமையாக முடிவுறுத்தி அம்பாளின் மஹா கும்பாபிஷேகத்தினை மிகவும் சிறப்புற நடாத்துவதற்குரிய முழுமையான பணிகளை தேவஸ்தானம் மேற்கொண்டு வருகின்றது.

இந்தப் பணிகளுக்கு உலகெங்கும் பரந்து வாழும் அன்னையின் பக்தர்களிடம் இருந்து உதவிகளை எமது தேவஸ்தானம் வேண்டி நிற்கின்றது. எனவே வேதவஸ்தானத்தின் காரியாலயத்தில் நேரடியாகவோ அல்லது வங்கி இலக்கங்கள் ஊடாகவோ தங்களது உதவிகளை அன்னையின் திருப் பணிகளுக்கு பக்தர்கள் தங்களது உதவிகளை வழங்க முடியும். உலகப் புகழ்பெற்ற தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேகப் பணிகள் யாவும் சிறப்புடன் நிறைவு பெற பக்தர்களின் தாராள உதவிகளை வேண்டி நிற்கின்றோம்.

இந்தப் பணிகளுக்கு தங்களின் உதவிகளை வழங்கும் பக்தர்கள் ஆலய அலுவலகத்தில் அதற்குரிய பற்றுச் சீட்டினை பெற்றுக் கொள்ள முடியும். வங்கிகளில் வைப்பிடும் பக்தர்கள், வாரசமயயைஅஅயவெநஅிடநளூபஅயடை.உழஅ என்ற எமது மின்னஞ்சல் முகவரிக்கு தங்களின் விபரங்களை அனுப்பி வைக்குமாறு பணிவுடன் வேண்டி நிற்கின்றோம்.

வங்கி இலக்கங்கள்

இலங்கை வங்கி சுன்னாகம் கிளை, கணக்கு இல:- 07470940 அல்லது 77683985, கொமர்ஷல் வங்கி சுன்னாம் கிளை, கணக்கு இல:-ஊ1107000214

## மகத்தான கல்விப்பணி

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட 7 மாணவிகளுக்கு (1276793 ரூபா ) பெறுமதியான கணனிகள் (Laptops ) வழங்கப்பட்டன. இதனை கலாநிதி ஆறு.திருமுருகன் வழங்கி வைத்தார்.

கணனிகளை அன்பளிப்பாக வழங்கியவர் திரு.திருமதி.கேசவன் ஜனனி தம்பதிகள். சிட்னி , அவுஸ்ரேலியா





# விழித்தவரெல்லாம் பிழைத்துக் கொள்வர் போட்டித் தொடர் - 01

அபயம், சிவபூமி மற்றும் துமி அமைப்புக்கள் இணைந்து நடத்தும் மாணவர்களுக்கான விழிப்புணர்வு போட்டிகளை தொடர்ச்சியாக நடத்த திட்டமிட்டு உள்ளோம்.

பிரிவுகள்
1. தரம் 06 - தரம் 09
2. தரம் 10- தரம் 13
3. பல்கலைக்கழக.். ஏனைய கல்வி நிறுவன மாணவர்கள்

போட்டிகள்
1. கவிதைப் போட்டி
2. சிறுகதைப் போட்டி

கருப்பொருள்
வாழ்வை சூனியமாக்கும் போதைப் பொருள் பாவனை

பரிசு விபரம்
1. முதல் பரிசு (ரூபா. 10000.00)
2. இரண்டாம் பரிசு (ரூபா. 7500.00)
3. மூன்றாம் பரிசு (ரூபா. 5000.00)
4. விசேட பரிசுகள் (ரூபா. 2500.00 படி 03 பேர்)

போட்டி நிபந்தனைகள்
1. ஆக்கங்கள் யாவும் குறித்த மாணவரின் சுயமான ஆக்கம் ஆகவும், இதற்கு முதல் வேறு ஊடகங்களில் பிரசுரிக்கப்படாததாகவும், வேறு போட்டிகளில் பங்குபற்றியிராததாகவும் இருத்தல் வேண்டும். இதனை குறித்த மாணவரின் ஆசிரியர் ஒருவர் உறுதிப் படுத்தி, கையோப்பமிட்டிருக்க வேண்டும்.
2. மாணவரின் முழுப்பெயர், தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம், கற்கும் கல்வி நிறுவன பெயர், கற்கும் ஆண்டு/பிரிவு, தேசிய அடையாள அட்டை இலக்கம், தற்போதைய வதிவிட முகவரி என்பவற்றையும் ஆக்கத்தோடு இணைக்க வேண்டும்.
3. எந்தவிதமான சொற்கள் எண்ணிக்கை கட்டுப்பாடுகளும் ஆக்கங்களுக்கு கிடையாது.
4. ஆக்கத்தோடு, இலக்கம் 02 இல் குறிப்பிட்ட சுயவிவரங்களையும் உள்ளடக்கி, தபால் மூலம் எமக்கு 31.12.2023 ற்கு முதல் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.




தபால் அனுப்ப வேண்டிய முகவரி
"விழித்தவரெல்லாம் பிழைத்துக் கொள்வர் போட்டித் தொடர் - 01,
சிவபூமி பாடசாலை,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.

5. ஒருவர் இருவகை போட்டிகளிலும் பங்குபற்றலாம்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. மேற்கூறிய நிபந்தனைகளில் இருந்து விலகும் ஆக்கங்கள் நிராகரிக்கப்படும்.

யாழ் இந்துக்கல்லூரியில் கந்தபுராண படலம் முற்றோதல் நிகழ்வு வெகுசிறப்பாக 01.12.2023 அன்று நடைபெற்றது. ஈழத்தின் ஓதுவார்கள் பங்குபற்றிய நிகழ்வில் பல மாணவர்களும் கலந்து கொண்டார்கள்.








# புதிய சேவை...

இலங்கையில் உள்ள இந்து ஆலயங்களின் வரலாற்றில் முதன்முறையாக,

தெல்லிப்மை துர்க்கா தேவி தேவஸ்தானத்தினால்,

குறுந்தகவல்(SMS) மூலமான செய்திச் சேவை இன்று தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தினால் ஆற்றப்பட்டு வரும் பல்வேறு சமூக நலத்திட்ட பணிகள், விசேட உற்சவங்கள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய முழுமையான விபரங்களை,

அன்னையின் பக்தர்கள் இனி நேரடியாக குறுந்தகவல்(SMS) மூலம் எவ்வித கட்டணங்கள் இல்லாமல் பெற்றுக் கொள்ள முடியும்.

https://www.tellidurga.org என்ற தேவஸ்தானத்தின் இணையத்தள முகவரிக்கு சென்று தங்களுடைய தொலைபேசி இலக்கங்களை பதிவு செய்து கொள்ள முடியும்.

தொலைபேசி இலக்கங்களை உறுதிப்படுத்தும் நோக்கில் OTP முறை (One-Time Passwords Authenticate System) பயன்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் 25.03.2024ம் திகதி நடைபெறவுள்ள மஹா கும்பாபிஷேகத்தினை முன்னிட்டு இந்த விசேட சேவை பக்தர்களின் நன்மை கருதி செஞ்சொற்செல்வர் அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும் விபரங்களுக்கு மிகவும் கண்கவரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள தேவஸ்தானத்தின் https://www.tellidurga.org என்ற இணையத்தளத்தினை பாருங்கள்.

## மருத்துவ பீட புதிய கட்டிடம் பால் காய்ச்சும் நிகழ்வு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்காக யாழ் நகரில் புதிதாகக் கட்டப்பட்ட எட்டு மாடிகளைக் கொண்ட மருத்துவப் பிரிவு கட்டிடம் உத்தியோகபூர்வமாக விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

புதிய கட்டடத்திற்கான “சாந்தி பூஜை” (23.11.2023) நடைபெற்றதுடன் (24.11.2023) சமய சம்பிரதாயபூர்வமாக கட்டிடத்தில் பால் காய்ச்சப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சி.சிறீசற்குணராஜா, பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர், மருத்துவ பீடத்தின் கல்விப் பணியாளர்கள், ஆலோசகர்கள் உட்பட பல்வேறு முக்கியஸ்தர்கள் கலந்து சிறப்பித்தனர்.












# மறைந்தும் மறையாதவர் பேராசிரியர் செ.யோகராசா

கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் மூத்த பேராசிரியர் செ.யோகராசா அவர்கள் நேற்று 7.12.2023 மதியம் கொழும்பில் காலமாகிய செய்தி தமிழ் உலகை மிக்க கவலையுறச் செய்துள்ளது.

பேராசிரியர் செ. யோகராசா அவர்களை பற்றியும் ஈழத்து இலக்கியப் பரப்பில் அவரது பாரிய பங்களிப்பு பற்றியும் வெறும் எழுத்துக்களில் சுருக்கி விட முடியாது.



பேராசிரியர் செ. யோகராசா பல்துறைப் பரிமாணங்களைக் கொண்ட படைப்பாளியாகவும், ஆற்றல் மிக்க ஆய்வாளராகவும், பலராலும் மதிக்கப்படுகின்ற பண்பாளனாகவும் இருந்து கொண்டு, சிறந்த திறனாய்வாளராக என்றும் உயர்ந்து நிற்கிறார்.

கரவெட்டியைச் சேர்ந்த பேராசிரியர் செ.யோகராசா இளமைக் காலத்தில் கருணை யோகன் என்ற புனை பெயரில் கவிதைகளும், சிறுகதைகளும் எழுதியுள்ளார்.

பேராசிரியர் செ.யோகராசாவின் தமிழ் இலக்கியப் பணி மிக காத்திரமானது. இதுவரையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள், எட்டு நூல்கள், ஆறு தொகுப்பு நூல்களை படைத்துள்ளார்.

இவரது நூல்களில் இன்றைய இலக்கியங்களில் இதிகாசப் பெண்பாத்திரங்கள், ஈழத்து நவீன இலக்கியம்,ஈழத்து நவீன கவிதை,
ஈழத்து வாய்மொழிப் பாடல் மரபு போன்ற பல நூ ல்களை படைத்துள்ளார்.

கடந்த மூன்று தசாப்த காலத்திற்கும் மேலாக நவீன இலக்கியம் சம்பந்தமான பல்துறை சார்ந்த ஆய்வுக் கட்டுரைகளை வெளிக்கொணர்ந்துள்ளார்.

'ஈழத்துச் சிறுவர் இலக்கியக் களஞ்சியம்', ஈழத்து சிறுவர் பாடல் களஞ்சியம்' என்ற இவரது நூல்கள் இரண்டையும், ஆழ்ந்த அகன்ற அறிவிற்காய் 'குமரன் புத்தக இல்லம் 'வெளியிட்டுள்ளது.

செ. யோகராசா 'ஈழத்துத் தமிழ் சிறுகதைக் களஞ்சியம்' என்னும் நூல் இலங்கையில் வெளிவந்த மிக முக்கிய, மிகச் சிறந்த சிறுகதைகளின் தொகுப்பாக இந்நூல் அமைகின்றது.

நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளையும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்கங்களையும் கொண்ட இத்தொகுப்பு இலங்கைச் சிறுகதை வரலாற்றில் முக்கிய தடம் பதித்த சிறு கதை ஆசிரியர்கள் பற்றிய குறிப்பினையும் கொண்டுள்ளது என்ற வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது.

நவீன இலக்கிய வளர்ச்சியில் இவரது இலக்கிய பங்களிப்பு விசாலமாக அமைந்துள்ளது. எந்த ஆய்வரங்கிலும் தமது காத்திரமான கட்டுரைகளை முன்வைத்து ஆற்றுகின்ற உரை புதிய அணுகுமுறைகளைப் பிரதிபலித்து நிற்பதைக் காணலாம். அத்துடன் ஈழத்தில் வெளிவந்த அதிக நூல்களுக்கு அணிந்துரை எழுதியவரும் இவரே. தனது எழுத்துக்கள் மூலம் பல இளம் படைப்பாளிகளின் இலக்கிய வாழ்வுக்கு உந்து சக்தியாகவும் விளங்கியவர்.

பேராசிரியர் திரு.செ.யோகராசாவின் ஈழத்து இலக்கிய வரலாறு, புகலிட இலக்கியம், போரிலக்கியம், பெண்ணிய இலக்கியம் நாட்டார் இலக்கியம், சிறுவர் இலக்கியம் போன்ற பல்வேறு துறை சார்ந்த இவரது ஆய்வுகள் மிகவும் பெறுமதி வாய்ந்தவை.

அத்துடன் 'ஈழத்து நவீன கவிதை புதிய உள்ளடக்கங்கள் - புதிய தரவுகள் - புதிய போக்குகள்' என்ற நூலிற்காக தேசிய சாகித்திய விருது 2007ல் பேராசிரியர் செ. யோகராசா பெற்றுள்ளார்.

'பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை - பிரதேச சாகித்திய விருதை 2007 இலும், பின்னர் 'ஈழத்து நாவல் வளர்ச்சியும் வளமும்'பிரதேச சாகித்திய விருதை 2008 இலும் பேராசிரியர் செ. யோகராசா பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈழத்து எழுத்திலக்கிய உலகின் முக்கிய ஆய்வாளரை, பேராசிரியரை தமிழ் கூறும் நல்லுலகம் இழந்துள்ளது.
சிறுவர் இலக்கியம், சிறுகதை, கவிதை, நாவல் சஞ்சிகைகள் ஆகிய துறைகளில் கொண்ட ஈடுபாடும், அக்கறையும், தேடலும் அவரைச் சிறந்த ஆய்வாளராக தமிழ் இலக்கிய உலகு அறிந்துள்ள பேராசிரியரை தமிழ் கூறும் நல்லுலகம் தற்போது இழந்துள்ளது

ஆழ்ந்த இரங்கல்கள் ஐயா

## சிவபூமி பாடசாலைக்கு முதல் இடம்

வடமாகாண சமூகசேவைகள் திணைக்களத்தினால் சிறந்த மாற்றுத்திறனாளிகளுக்கான பாடசாலை தெரிவில் எமது சிவபூமி பாடசாலை முதலிடத்தை பெற்றது. இதற்கான விருது (05.12.2023) பாடசாலையின் அதிபர் திருமதி.கலைவாணி குகதாசன் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.






## பக்தி வெள்ளம் பிரவாகிக்கும் மார்கழி மாதம்

மார்கழி மாதத்தில் கோவிலுக்கு செல்பவர்கள் திருப்பாவை, திருவெம்பாவை பாடல்களை பாடினால், அளவற்ற புண்ணியத்தையும், தடைகள் அனைத்தும் நீங்கி விரைவில் திருமண யோகமும் கைகூடிவரும். மார்கழி மாதத்தில் அதிகாலை பிரம்ம முகூர்த்த நேரத்தில் வாயு சக்தியான தூய்மையான காற்று பூமியெங்கம் பரவி இருக்கும். அந்த தூய்மையான காற்றை சுவாதித்தால் ரத்த ஓட்டம் சீராகி உடம்பில் புத்துணர்ச்சி கிடைக்கும் என்பது அறிவியல் ரீதியான உண்மையாகும். மற்ற நாட்களில் கோவிலுக்கு சென்று வழிபடுவது செய்தால் தான் உரிய பலனும் புண்ணியமும் கிடைக்கும்.

மார்கழி மாதத்தில் வெறுமனே கோவிலுக்கு சென்று சுவாமியை தரிசனம் செய்து வந்தாலே புண்ணியம் கிடைக்கும் என்பது ஐதீகம். இதற்கு காரணம் இந்த மாதத்தில் தான் வைணவர்களுக்கு பிரியமான வைகுண்ட ஏகாதசி திருநாளும், சைவ சமயத்தை சேர்ந்தவர்களுக்கு பிடித்தமான ஆருத்ரா தரிசன திருநாளும் வருவதால் தான்.

மார்கழி மாதத்தில் விரதம் இருப்பவர்கள், அதிகாலையில் குளிர்ந்த நீரில் குளித்துவிட்டு, கோவிலுக்கு சென்று திருப்பாவை மற்றும் திருவெம்பாவை பாடல்களை பாடி சுவாமி தரிசனம் செய்து வருவார்கள். இதில் திருப்பாவை பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாள் அருளித் தந்தது. திருவெம்பாவை சைவ சமயக்குறவர்களில் ஒருவரான மாணிக்கவாசகர் அருளியது.

திருவெம்பாவை பாடலை மாணிக்கவாசகர் பஞ்சபூத தலங்களில் ஒன்றான திருவண்ணாமலையில் அருளியதாகும். அதேபோல், திருப்பள்ளியெழுச்சி பாடல்கள் திருப்பெருந்துறையில் அருளியது.

கன்னிப் பெண்கள் தோழியரை தூக்கத்தில் இருந்து எழுப்பி, அனைவரும் ஒன்று சேர்ந்து நீர்நிலைகளுக்கு சென்று கூட்டமாக குளித்துவிட்டு தாங்கள் வழிபடும் தெய்வத்திடம், தங்களின் வாழ்வு வளமோடு இருக்கவேண்டும் என்றும், தங்களுக்கு கண் நிறைந்த கணவன் வேண்டும் என்றும் வேண்டிக்கொள்வதாக அமைந்த பாடல்கள் இவை.

திருவெம்பாவை பாடல்கள் இருபதும், திருவண்ணாமலையில் இருந்தபோது, அங்கிருந்த கன்னிப்பெண்களும் சிறுமிகளும் பாவை நோன்பு இருப்பதைக் கண்டு, தன்னையும் ஒரு கன்னிப்பெண்ணாக கற்பனை செய்துகொண்டு பாடிய பதிகங்களாகும்.




ISBN - 978-955-7420-00-4